# நற்றிணை பாடல்களில் வரும் ஊரின் சிறப்புகள்

முனைவர். க. தனலெட்சுமி,
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை (சுயநிதி)*
*நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,*
*மதுரை – 625019*

**முன்னுரை**

பண்டைய காலத் தமிழகம் வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும், கிழக்கும், மேற்கும் கடல்களும் எல்லைகளாக அமைகின்ற விரிந்த பரந்த நிலப்பரப்பாக இருந்தது. இதனை,

**"வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுகத்து"**

என்னும் பாடல் தெளிவுபடுத்துகிறது..

சங்க இலக்கியப் பாடல்களில் மக்கள் வாழ்ந்த ஊர்களையும், அந்த ஊர்கள் அடங்கிய நாடுகளையும் குறிப்பிடப்படுகின்றன. ஊர் என்ற சொல்லால் வயலும் வயலும்சார்ந்த பகுதியை குறிக்கும். நாடு ஊர் என்பன நிலத்தின் உட்பிரிவுகளாகும், நிலம், திணை என்பன பொதுவான பிரிவின. திணையின் உட்பிரிவு ஊர். சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் நற்றிணை முதலிடம் பெறுகிறது. நல்ல ஒழுகலாறுகளைக் கூறுவது என்பது இதன் பொருள் ஆகம். திணை என்ற சொல்லுக்குக் கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது என்று பொருள். 9 அடி முதல் 12 வரை உள்ள பாடல்கள் உள்ளன. நற்றிணைப் பாடல்களைத் தொகுக்க செய்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். தொகுத்தவர் யார் என்று தெரியவில்லை. இதில் 58 பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. அகநானூற்றிலும், நற்றிணையிலும் ஊர்ப்பெயர்கள் மிகுதியும் உவமைகளாகப் பயின்று வந்துள்ளன. தொண்டி, மாந்தை, கிடங்கில், சாய்க்காடு, ஆர்க்காடு, கூடல், பொறையாறு, கழுமலம், உறந்தை, மருங்கூர்ப்பட்டினம், இருப்பை, பாரம், குன்னூர், கழாஅர், முள்ளூர், ஊணூர், குடந்தை ஆகிய உவமைகளாகப் பயின்று வந்துள்ளன. நற்றிணையில் ஊரின் சிறப்புகளை பற்றி காணலாம்.

**அரசர்கள் ஆட்சி**

சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு ஆகிய மூன்று நாடுகள் தமிழகப் பெருநிலப்பரப்பாக அமைந்திருந்தன. அவர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு குறுநில மன்னர்கள் சிற்றரசர்களாய் ஆட்சி செய்தனர். "ஒரு நாட்டின் மலைகள், ஆறுகள், அதன் தட்பவெப்ப நிலைகள், கனிமவளம், ஆகியவை அந்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையினை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன."[1] பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டனர். சோழர்கள் பூம்புகார், உறையூர், என்ற இரு நகரங்களையும், தலைநகராகக் கொண்டு ஆண்டனர், சேரர்கள் மேற்குக் கரைப்பகுதியாகிய வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். வேளிர்களும் சிற்சில குறுநில மன்னர்களும் சிறு நிலப்பகுதிகளை ஆண்டு வந்தனர்.

**தொண்டி நகரம்**

**"திண்தேர்ப் பொறையன் தொண்டி" (நற். 8-9)**

**"கல்லென் புள்ளின் கானல்அம் தொண்டி" (நற். 195-5)**

கல் என்ற ஒலியுடன் ஆரவாரம் செய்யும் பறவைகளைக் கொண்ட கடற்கரைச் சோலையை உடைய தொண்டியில் உள்ள வயலில் நெல்லை அரிகின்ற உழவர்கள் கூரிய அரிவாளால் பல இதழ்களைக் கொண்ட நெய்தல் மலரையும் அரிகின்றனர். அழகுடைய வலிய தண்டினையுடைய நெய்தல் பூக்கள் கிடக்கும் சோலைகளை உடையது சேரலாதனின் தொண்டிநகர் ஆகும்.

**கானலந்தொண்டிப் பொருநன் வென்வேல் (நற் 18- 5)**

தொண்டிப் பட்டிணத்தைச் சூழ்ந்து கோட்டை மதில் இருந்துள்ளது. கோட்டை வாயிலின் கதவில் மூவன் என்பவனுடைய பல்லைப்பிடுங்கிப் பதித்திருந்ததை என்பதனை மேற்கூறிய பாடலில் காணமுடிகிறது.

**மாந்தை**

**"கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்**
**இரைதேர் நாரை எய்தி விடுக்கும்**
**துறைகெழு மாந்தை அன்னஇவள் நலம்" (நற். 35 - 5-7)**

பொங்கி எழுகின்ற அலை மோதிய மணல் பொருந்திய கடற்கரை அங்குக் காம்பு உதிர்ந்த நாவற் கனிகளை மொய்த்த வண்டுகள் அப்பழங்களைத் தம்மை ஒத்த வண்டுகள் எனக் கருதின. வண்டுகளைப் பழங்கள் என்று கருதி நண்டு வண்டுகளைக் கைக்கொண்டது. நண்டுபிடித்த வண்டு ஒலிக்க, ஆரம்பித்தை உணர்ந்து அது பழம் அன்று வண்டு என நண்டு உணர்ந்தது. அப்போது அங்கு வந்த நாரையைக் கண்டு நண்டு கனியை விட்டு விட்டு ஒடியது. அத்தகைய கடற்கரையை போன்றது மாந்தை நகர் ஆகும்.

**கொல்லிமலை**

புகழ்பெற்ற உயர்ந்த கொல்லிமலை மேல் இரவலர் வருத்தப்படாமல் ஏறுவர். அம்மலைமேல் தேனீக்கள் காந்தள் குலையில் கூடுகட்டியிருக்கும். பொறையனின் கொல்லிமலை நிறைவுற்ற திங்கள் போல விளங்கும்.

**"நிறையும் மதியின் இலங்கும் பொறையன்**

**பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக்" (நற். 346)**

என்று எயினந்தை மகன் இளங்கீரனார் கூறுகின்றார்.

**எழில்மலை**

நன்னன் கொண்கானத்தில் உள்ள பொலிவு பொருந்திய எழில்மலையை உடையவன். அவன் மலையில் எல்லா வளமும் சிறப்புற்றிருந்தன. இதனை,

**"ஒண்தொடி மகளிர் இழையானிக் கூட்டும்" (நற். 391)**

**அகப்பா**

**"அகப்பா அழிய நூறி செம்பியன்" (நற்14-4)**

குட்டுவன் அயலாரின் அகப்பா என்னும் அரனை அழித்தான். சேரனுடைய மதில் அழியுமாறு இடித்துச் சோழ வேந்தன் ஒரு நாள் அவ்வூரைத் தீயிட்டுக் கொளுத்தினான். இவ்வாறாக தொண்டி நகரம். மாந்தை கொல்லிமலை எழில்மலை அகப்பா போன்ற ஊர்களை சேரமன்னர்கள் ஆட்சி செய்த ஊரினை நற்றிணை பாடல்களில் காணமுடிகிறது.

**நற்றிணைப் பாடல்களில் சோழ மன்னர்கள் ஊர்கள்**

சோழ மன்னர்களின் சிறப்புப்பெற்று விளங்கிய ஊர்கள் குடந்தை, ஆர்க்காடு, பிடவூர், நெய்தலங்கானல், கழார், குராப்பள்ளி, சாய்க்காடு, போரூர், பொத்தி, ஆவூர், வல்லம், தலைச்செங்கோடு, வெண்ணி, போன்ற ஊர்கள் என்று மயிலை சீனி வேங்கடசாமி கூறுகின்றார்[2]

**வெண்ணி**

வெண்ணி என்ற ஊரில் வயல் வெளிகள், செழித்து நிற்கும், அங்கு வாளைமீன்கள் துள்ளி விளையாடும் பொய்கையில் நீர்நாய் துயிலும் சிறப்பினை உடைய ஊரை உடையவன் கிள்ளிவளவன், இதனை,

**"பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்"**

**கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த" (390)**

என்ற பாடலில் காணலாம்.

**உறந்தை**

**"மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து" (நற்றிணை 400-7)**

வீரம் பொருந்திய சோழரின் உறையூர் அவைக்களத்தே அறம் நீங்குதலை பார்க்க முடியாது. தித்தன் உறையூரின் தலைவன், இவன் ஊர் எல்லா வளமும் பெற்றதாகும், எப்போதும் மக்கள் மகிழ்ச்சியாகக் கூடி இருப்பதால் ஆரவாரம் கேட்டுக் கொண்டே இருக்கும்.

**ஆரேற்று**

**"சிறுகோள் சென்னி ஆரேற் றன்ன" (நற். 265-6)**

சோழனின் ஆரேறு என்னும் ஊர் மழை போன்ற கொடையையும், கள் உணவையும் உடைய ஒரியின் மலை சிறப்பாக உள்ளதை காணமுடிகிறது.

**ஆர்க்காடு**

**"கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்" (நற். 227-6)**

பொன்னால் ஆகிய பூண்களையும் உடையவர் சோழர் சோழர்களுடைய ஊராகிய ஆர்க்காட்டின் தெருக்களில் கொடிகள் அசையும் கள் கடைகளில் வண்டுகள் ஒலித்து அடங்காததாகிய தேர்கள் திரிந்து இயங்குகின்ற தெருக்கள் அமையும்.

**கழாஅர்**

**"வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்**
**நல்வகை மிகுபலிக் கொடையோடு உகுக்கும்" (நற். 281-3)**

வெற்றிக் கொள்ளும் சோழரது கழாஅர் என்னும் ஊரில் மக்கள் காக்கைக்கு சோறு வைப்பர். அவ்வூரிருக்கும் குற்றமற்ற கோயில் மரத்தில் அந்தச் சோற்றை எடுத்துச் சென்று மழையில் நனைந்து கொண்டு காக்கை உண்ணும். ஊண்ணும் போது கொள்ளப் பெறும் மிகுந்த பலிச் சோற்றை ஊன் துண்டங்களோடு கூடிய பெரிய விருந்தாகப் பெறுவதற்கு அக்காக்கை கருதியிருக்கும்.

**போஒர்**

போர்க்கிழவோன் பழையன் சோழநாட்டின் காவிரிக் கரைசார்ந்த போரென்னும் சிற்றூரை ஆட்சி செய்தவன். போரில் வெற்றியும், படைத்தலைவனாகவும் விளங்கினான்.

**வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்**
**பழையன் வேல்வாய்த் தன்னநின் (நற்.10)**

சோழமன்னர் கொங்கு நாட்டாரை அடக்கும் பொருட்டு, வெண்மையான தந்தங்களை உடைய யானைகளைக் கொண்ட, போஒர் என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்பவனைத் துணையாகக் கொண்டனர்.

**நெடுந்தெரு**

**"நெடுந்தெரு அன்ன நேர்கொள் நெடுவழி,**

**இளையர் ஏகுவனர் பரிப்ப, வளைஎனக்'' (நற்.161 – 6)**

சோழ நாட்டில் உள்ள நெடுந்தெரு என்னும் ஊர் போன்ற அழகுபொருந்திய நீண்ட வழியில் நம் வீரர் அங்கங்குத் தங்கிச் செல்வர். காட்டுப்பகுதியில் உள்ள செங்காந்தள் மலர்கள் வீரர்கள் செல்லும் குதிரையின் குளம்புகள் அழுந்து படுதலால் சங்குகள் உடைந்தன போன்றுத் தோன்றும்.

**பாரத்து**

**''பாரத்து அன்ன ஆர மார்பின்**
**சிறுகோற் சென்னி ஆரேற் றன்ன'' (நற். 265-5)**

மிஞிலி என்பவன் பாதுகாக்கும் பாரம் என்ற ஊரினைப்போலவும், அத்திமாலையை உடையவனாகவும் சிற்றூர் பலவற்றை ஆள்பவனாகவும் சிறு கோல் உடையவனாகவும் சோழன் விளங்குவான். அவனுடைய ஆரேறு என்னும் ஊரினை காணமுடிகிறது. பேரியனின் கள்ளின் மணங்கமழும் பொறையாறு நாரையின் கூட்டம் இறால் மீனை உண்டு மகிழ்ந்திருக்கும் சிறப்பினையுடையதாகும். இதனை

**''நறவு மகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன்'' (நற் 290)**

என்ற பாடலின் வழி காணமுடிகிறது.

**கூடல்**

பகைவர்களின் அரணை அழித்து அவர்களை வென்று, முரசைக் கைக்கொண்டு வந்தான் பாண்டியன், இவனுடைய தலைநகரம் பெரும் புகழையடைய மதுரை என்பதை

**''பெரும்பெயர்க் கூடல் அன்னநின்'' (நற். 39-10)**

பெரும்பெயர்க்கூடல் அடுபோர்ச்செழியன் ஆட்சிக் காலத்துக்கூடல், பகைவர்கள் தனக்கு அரணாக்கோட்டை மதிலுக்குள் இருக்கையில் அவர்களது முரசினைக் கைப்பறி முழக்கி வெற்றி கண்டவன் அடுபோர்ச் செழியன்.

**''பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கண்'' (நற்.298-9)**

நல்ல மாலைகளை அணிந்த பொன்னால் ஆகிய தேரை உடைய பாண்டியனது கூடல் நகரிம் என்று பொற்றேர்ச் செழியன் கூடல் நகரை குறிப்பிடுகிறது. கூடல் என்பது மதுரை மாநகர் என் அழைக்கப்பட்டதை அறியமுடிகிறது. கூடல் நகரில் கடைத்தெருவில் எண்ணற்ற கடைகள் நிறைந்திருக்கும் பல மொழி பேசும் பன்னாட்டு வணிகர்களும் அவ்வூரில் தான் கூடினர். வேற்று நாட்டு பொருட்களைக் கொண்டு வருவதும், இங்குள்ள பொருட்களைக் கொண்டு வருவதும் இங்குள்ள பொருட்களை வாங்கிச் செல்வோருமாக இரு தரப்பினரும் மதுரை மாநகரில் குழுமியிருந்ததை அறியமுடிகிறது என்கிறார் ந. சுப்ரமணியம்.[3]

குட்டுவனின் குடமலையில் பூத்த மலர்கள் மிகுந்த நறுமணம் உடையன குட்டுவனின் குடமலைசிசிறப்பின் மூலம் குடமலை பாண்டியனின் ஆளுகைக்குட்பட்ட பகுதி என்பதை அறியமுடிகிறது.

**''பசும்பூண் வழுதி மருங்கை அன்னஏன்'' (நற். 358 – 10)**

சிவந்த இறாமீனின் பஞ்சுபோன்ற தலையை உடைய முடங்கலைச் சிறிய வெண் காக்கை நாட்காலையில் இரையாகப் பெறும். பசிய பூண் அணிந்த பாண்டியனது மருங்கூர் போன்ற ஊர் ஆகும்.

**ஊணூர்**

**''ஏள் தழும்பன் ஊணூர் ஆங்கண்'' (நற். 300-10)**

புாணர்களின் தலைவன் தழும்பன் என்பானின் ஊணூர் ஆகும். அந்த ஊரில் பழகிய ஆண்யானை இல்லம் தோறும் சென்று பிச்சை எடுக்கும் ஊணுர் அரசன் வாய்மொழித்தழும்பன் இவன் யாழ்ப்பாணர்களின் தலைவன் ஊணூரில் பிச்சை எடுக்கும் யானைகள் வந்து போகும்.

**இருப்பையூர்**

கோடை வள்ளலான விராஅன் என்பவனுக்குச் சொந்தமானது இருப்பையூர்.

**“தேர் வண் விராஅன் இருப்பை அன்ன, என்” (350)**

**சிறுகுடி**

**“வாணன் சிறுகுடி அன்னஎன்” (நற்-340-9)**

கற்றறியாத யானையையும் விரைந்து செல்லும் குதிரையையும் உடையவன் செழியன். அவனால் உருவாக்கியது இப்பெரியகுளம் அக்குளத்தில் அடைக்கப்பட்டிருந்த நீர்மடை திறந்துவிட்டதால் வெளிறேிக் கால்வாயை அடைந்து சென்றது. கால்வாயில் எதிர்த்து வரும் கொம்பை உடைய வாளை மீனைக் கால்வாயில் இருந்து சேறுடைய வயலின் உள்ளே ஒடுமாறு செல்லும் உழுத எருதின் காலில் பட்ட சேறு, பள்ளிகளுடன் வெண்மையான நிறத்தில் மேற்புறத்தில் விளங்கும். அவ்வாளை மீன் செம்மையாகச் சாலடித்து உழும் பசுமையான கால்களை உடைய வயலின் வரம்படியில் பிறழும். இத்தகைய வாள் சிறுகுடி என்றும் ஊரின் சிறப்பாகும்.

**“மூதில் அருமன் பேர்இசைச் சிறுகுடி”(நற். 367-6)**

தெய்வத்திற்கு இடும் குட்டையான கால்களை உடையதும், மிகுதியான உணவுப் பொருள்களை உடையதுமான நல்ல வீடுகள் பல அமைந்த பழமைமிக்க அருமன் என்பவனது புகழ் மிக்க சிறுகுடி என்னும் ஊர் ஆகும்.

**மருங்கூர் நகரம்**

பாண்டியனின் மருங்கூர் நகரம், அருமனின் சிறுகுடிஊர் செல்வ வளமிக்கது.

**“பசும்பூண் வழுதி மருங்கை அன்னஏன்” (நற். 358 – 10)**

சிவந்த இறாமீனின் பஞ்சுபோன்ற தலையை உடைய முடங்கலைச் சிறிய வெண் காக்கை நாட்காலையில் இரையாகப் பெறும். பசிய பூண் அணிந்த பாண்டியனது மருங்கூர் போன்ற ஊர் ஆகும்.

**முடிவுரை**

நற்றிணைப் பாடல்களில் சேர மரபினர், சோழ வேந்தர்கள், பாண்டிய வேந்தர்கள் குறுநில மன்னர்கள் அவர்களில் சிறப்பாக கடையெழு வள்ளல்கள் குறித்த செய்திகள் அவர்கள் ஆட்சி புரிந்த ஊர்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. நற்றிணையில் ஊர் பெயர்கள் மிகுதியும் உவமைகளாகப் பயின்று வந்துள்ளன. ஊரினைப் பற்றி பார்க்கும்போது பல்வேறு வரலாற்றுச் செய்தியினையும் ஊரின்பெயர்வரக்காரணம், போன்றவற்றையும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் நற்றிணை பாடல்களில் பல்வேறு ஊர்கள் இருப்பதையும் அதன் சிறப்புகளையும், பாடல்களில் வழி அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

[1] கே. கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் ப. 24

[2] மயிலைசீனி வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, ப. 45.

[3] டாக்டர். ந. சுப்பிரமணியம், சங்க கால வாழ்வியல் ப. 286.